தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - 2017

**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. ஐ, ஔ – ஆகியவற்றின் இன எழுத்துக்கள் எவை?
2. உயிரளபெடைக்கான மாத்திரை அளவு யாது?
3. நிகழ்கால இடைநிலைகள் யாவை?
4. மொழிக்கு இறுதியில் வரும் சார்பெழுத்து எது?
5. இடைப்போலிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
6. பொன்னணி – எவ்விதிப்படி புணர்ந்தது?
7. நூலில் இடம்பெறும் உத்திகள் எத்தனை?
8. மரத்தை – என்னும் சொல்லில் இடம்பெறும் சாரியை யாது?
9. புணர்ச்சியில் ஏற்படும் மூவகை திரிபுகள் எவை?
10. வினா எழுத்துக்கள் எவை?
11. அறிஞன் – என்னும் சொல் பகுபதமா? பகாபதமா?
12. மருண்ம் – எவ்வகை குறுக்கம்?
13. சுட்டெழுத்துக்கள் யாவை?
14. நன்னூல் கூறும் எழுத்திலக்கணத்தின் பகுப்புமுறை எத்தனை?
15. தமிழ்மொழி – எவ்வகைப் புணர்ச்சி?

பிரிவு - 2

எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. **(5x3=15)**

1. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. சந்தியக்கரம் – விளக்குக.
3. பலசில - என்னும் சொற்கள் தம்முள்தாம் புணரும்போது எவ்வாறு புணரும்?
4. பகுபதத்தின் உறுப்புகள் யாவை?
5. தொகைநிலைத்தொடர்கள் எத்தனை? அவை யாவை?
6. உடனிலை மெய்ம்மயக்கம் சான்று தந்து விளக்குக.
7. போலியின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.
8. பெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பிரிவு - 3

<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. **(3x15=45)**

1. (அ) எழுத்துக்களின் பிறப்புக்களை நன்னூலார் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிமுதல், மொழி இறுதி எழுத்துக்கள் எவை? சான்றுகள் தந்து விளக்குக.

2. (அ) உயிரீற்றுப் புணர்ச்சியைச் சான்றுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) மெய்யீற்றுப் புணர்ச்சியைச் சான்றுகளுடன் விவரிக்க.

3. (அ) உருபு புணரியல் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வல்லினம் மிகும் இடங்கள், மிகா இடங்கள் ஆகியவற்றை சான்றுகள் தந்து விளக்குக.

❋❋ ❋